**செய்தி வெளியீடு எண்::904** **13.10.2010**

## <u>செவிலியர்களுக்கு ஊதிய உயர்வு</u>
## <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை</u>

ஆறாவது ஊதியக் குழு பரிந்துரையின் அடிப்படையில் ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், ஊதிய விகிதங்களில் இருந்த முரண்பாடுகளை நீக்கி அரசு ஆணையிட்டது. அதனைத் தொடர்ந்து செவிலியர்களின் சம்பள விகிதங்களை மாற்றியமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி தொடக்க நிலையில் பணிபுரியும் பணியாளர் செவிலியர்களுக்கு (Staff Nurses) அடிப்படை ஊதியமாக ரூ.9300–34800 நிலையில் 4200 ரூபாயாக இருந்த தர ஊதியம் 4450 ரூபாயாக உயர்த்தியும்; செவிலியர் கண்காணிப்பாளர்களில் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை பணியிடங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இரண்டாம் நிலை செவிலியர் கண்காணிப்பாளர்களாக மாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கான ஊதிய விகிதம் ரூ.9300–34800 நிலையில் 4600 ரூபாயாக இருந்த தர ஊதியம் 4700 ரூபாயாக உயர்த்தியும் நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும், தொகுப்பு ஊதியத்தில் பணிபுரியும் செவிலியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதந்திர தொகுப்பு ஊதியம் 3500 ரூபாய் என்பது 4000 ரூபாயாகவும், 4000 ரூபாய் என்பது 4500 ரூபாயாகவும், 5000 ரூபாய் என்பது 5500 ரூபாயாகவும் அதாவது மாதம் 500 ரூபாய், கூடுதலாக வழங்க முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இதுதவிர செவிலியர்களுக்கு புதியதாக மாதம் 500 ரூபாய் வீதம் செவிலியர்படி வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணையின் காரணமாக 12 ஆயிரத்து 361 செவிலியர்கள் பயன்பெறுவார்கள்; அரசுக்கு ஆண்டொன்றுக்கு 15 கோடியே 91 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

● * * * *

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**